தலைப்பு 010 – இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணை ஆணைக்குழு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 010 இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணை ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை மீதான ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணை ஆணைக்குழுவின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை மீதான ஆனைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணை ஆனைக்குழுவினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இலஞ்சம் அல்லது ஊழல் மீதான குற்றச்சாட்டு விசாரணை ஆனைக்குழுவினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணைண் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணை ஆணைக்குழுவின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
யூரோப்பிய ஒன்றியத்தின் மானியங்களின் கீழ் நிதியளிக்கப்பட்ட இலங்கையின் நீதித்துறைக்கான ஆதரவுத் (JURE) செயற்திட்டத்தினால் 2024 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டிருந்த 19 சொத்துக்கள் உறுப்படிக்குரிய ரூபா 25,394,239 ஆன பெறுமதி மீளாய்வாண்டினுள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தாமதப் பிழையின் காரணமாக CIGAS நிகழ்ச்சித்திட்டத்திற்கு தொடர்புடைய ஆண்டில் உள்ளடக்கப்படாவிடினும் 2025 பெப்ரவரி 24 ஆம் திகதி CIGAS BOS அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	மீளாய்வாண்டின் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதி பிரமாணம் 50 பிரகாரம் செலவின மதிப்பீடு யதார்த்தமாக தயாரிக்கப்பட்டிராமையினால் 17 மீண்டெழும் செலவின விடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் கூட்டுத்தொகை ரூபா 91,594,784 ஆன நிதியேற்பாடு பயன்படுத்தாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிதியேற்பாடு சதவீதமாக 16 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சை கொண்டிருந்தது.	காகிதப் பயன்பாடு மற்றும் வாகனப் பயன்பாடு குறைதல், எரிபொருள் விலை குறைதல், பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியாமை. பழுதுபார்த்தல் பணிகள் குறைதல் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம், மின்சாரம், தபால், போக்குவரத்து மற்றும் காப்புறுதி கட்டணங்கள் குறைவடைந்தமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் 50 பிரகாரம் சரியாக மற்றும் யதார்த்தமாக வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	04 மூலதன விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் கூட்டுத்தொகை ரூபா 22,737,537 ஆன சேமிப்பு காணப்பட்டதுடன் அது தேறிய நிதியேற்பாட்டில் சதவீதமாக 19 சதவீதம் தொடக்கம் 89 சதவீதம் வரையான வீச்சை கொண்டிருந்தது.	கட்டிடங்கள் பழுதுபார்த்தல் தாமதமாகியமை, புதிய ஆட்சேர்ப்பு தாமதமாகியமை, பயிற்சி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் UNDP நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக செலவினங்கள் ஏற்றமையினால் இவ்வாறு செலவினங்கள் சேமிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் 50 பிரகாரம் சரியாக மற்றும் யதார்த்தமாக வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆகஸ்ட் 04 ஆம் திகதி மரணித்த உத்தியோகத்தரொருவருக்கு அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 128,576 ஆன கடன் மீதி மற்றும் 2023 ஆகஸ்ட் 02 ஆம் திகதி சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 172,500 ஆன இடர் கடன் மீதி 2025 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படப்பட்டிருக்கவில்லை.	மரணித்த உத்தியோகத்தர்களின் மர பணிக்கொடைக்கான மானியக் கடிதம் வழங்கப்பட்ட பின்னர் கடன் மீதி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.	கடன் மீதி விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதி பிரமாணம் 94 (2) மற்றும் (3) பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பாக கூற்றில் கடப்பாடு மற்றும் பொறுப்புக்களாக ரூபா 10,215,397 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், திறைச்சேரி திரட்டப்பட்ட கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையில் (SA 92) கடப்பாடு மற்றும் பொறுப்புக்களாக ரூபா 5,986,785 என மட்டுமாக காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 4,228,612 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	SA 92 இல் உள்ளடக்கப்படுவது CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் 2024/12/31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ள கடப்பாடுகள் மட்டுமே. எனினும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது 2025/01/01 தொடக்கம் 2025/02/28 வரை 2025 ஆம் ஆண்டின் நிதியேற்பாட்டிலிருந்து செலுத்தப்பட்ட கடந்த ஆண்டிற்குரியஅக் காலப் பகுதியினுள் பெறப்பட்ட பட்டியல்களுக்குரிய கொடுப்பனவுகள் ஆவதுடன் இவை 2024 ஆம் ஆண்டில் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது.	ஆண்டிற்குரிய அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களுள் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் சரியான பெறுமதி SA 92 மாதிரியில் உள்ளடக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நி.பி 94(1) பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதியேற்பாடுகள் இல்லாவிடில் எந்தவொரு செலவினமோ அல்லது கடப்பாட்டிற்கு உடன்படக் கூடாததென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இரண்டு செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் சேமிப்பின் கூட்டுத்தொகை ரூபா 933,878 எனிலும் அச் செலவின விடயங்களுக்குரிய பொறுப்புக்களாக கூட்டுத்தொகை ரூபா 1,459,078 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் நிதியேற்பாட்டினை மிகைத்து ரூபா 525,300 தொகையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது.	திடீர் சோதனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனமொன்று கேரேஜில் பழுதுபார்க்கப்பட்டு இருந்த போது ஆரம்ப மதிப்பீட்டிற்கு மேலதிகமாக மேலதிக மதிப்பீமொன்று பெற்றுக் கொடுத்தமையினால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. தூய்மைப்படுத்தல் சேவைக்காக 2024 திசெம்பர் மாதத்தின் பட்டியல், 2025 ஆம் ஆண்டின் நிதியேற்பாடுகளில் கொடுப்பனவு செய்திருந்தமையினால் இது கடந்த ஆண்டிற்குரிய பொறுப்பாக கருதப்பட முடியாததென குறிப்பிடப்படடுள்ளது.	நி.பி 94(1) ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதி பிரமாணம் 371(5) பிரகாரம் உப கட்டுநிதி வழங்கப்பட்ட பின்னர் குறித்த பணி நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் அக் கட்டுநிதி மீண்டும் தீர்க்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2024 ஆம் ஆண்டினுள் 12 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 324,265 இற்குரிய தீர்ப்பனவு உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டு உப கட்டுநிதி தீர்ப்பனவு செய்வதற்காக 10 நாட்கள் தொடக்கம் 48 நாட்கள் வரையான காலம் கடக்கப்பட்டிருந்தது.	தொடர்புடைய பணிகள் தாமதமாகியமை, உத்தியோகத்தர் வெளிநாடு சென்றமை, அவசர விசாரணை பணிகளில் ஈடுபட்டமை, நீதிமன்ற பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டமை மற்றும் பல்வேறு காரணங்களால் கட்டுநிதி தீர்பனவு செய்வதற்கு கால தாமதங்கள் ஏற்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் 371(5) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.5 இலஞ்ச சுற்றிவளைப்புக்களில் - இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு இணக்க கூற்று

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டு அந்த சுற்றிவளைப்புக்கள் வெற்றியடைந்தால் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக அம் முற்பணம் வழக்குத் தடயப் பொருள் உத்தியோகத்தரின் பொறுப்பில் வைக்கப்பட்டு தீரப்பு வழங்கப்பட்ட பின்னர் காசாளருக்கு அத்தொகை தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் வழக்கு பொருட்களின் பிரிவினால் 2025 ஆகஸ்ட் 25 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிரகாரம் நிறைவடைந்துள்ள 31 வழக்குகளுக்குரிய சுற்றிவளைப்பு முற்பணம் கூட்டுத்தொகை ரூபா 822,500 பல்வேறு காரணங்களால் விடுவிப்பதற்கு முடியாதிருந்தது.	கணக்காய்வுக்குட்பட்ட திகதியில் நிலவிய சுற்றிவளைப்பு முற்பண மீதியில் ரூபா 64,485 ஆன தொகை தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய விசாரணை கோவைகள் கொண்டு வரப்பட்ட பின்னர் எஞ்சிய தொகை விரைவில் விடுவிப்பதற்கு மேல் நடவடிக்கைககள் எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.	சட்ட பணிகள் மற்றும் மேன்முறையீடுகள் நிறைவடைந்த பின்னர் முற்பணம் காசாளருக்கு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள	வழக்கு பொருட்கள் ஒப்பாய்விற்கு சட்ட உத்தியோகத்தரொருவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

நி.பி 756(6) பிரகாரம் வருடாந்தம் பொருட்கள் ஒப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் நிதி ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொருட்கள் ஒப்பாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆனைக்குழுவினால் 2024 ஆம் ஆண்டிற்குரிய வழக்கு பொருட்கள் மற்றும் பணத்தொகை தொடர்பான பொருட்கள் ஒப்பாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2025 யூலை 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	பொருட்கள் பிரிவில் உத்தியோகத்தர்களும் ஒருங்கிணைந்து இந்த பணி மேற்கொள்ளப்பட வேண்டியமையினால் அப் பிரிவில் காணப்படுகின்ற அவசர மற்றும் அதிக வேலைப்பளு காரணமாக இது ஓரளவு தாமதமாகியுள்ளது.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் விசாரணைக்காக காணப்பட்ட கோவைகள் 2,353 ஆவதுடன் 2024 ஆம் ஆண்டினுள் பெறப்பட்டிருந்த 2,941 கோவைகளுடன் கூட்டுதொகை 5,294 கோவைகள் மீளாய்வாண்டினுள் விசாரணைக்காக புலணாய்வு பிரிவிடம் காணப்பட்டது. அதில் 2,933 கோவைகளின் விசாரணைகள் 2024 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசாரணை பணிகளில் செயலில் இருந்த கோவைகளின் எண்ணிக்கை 2,361 ஆவதுடன் அதில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற வருடங்களின் பிரகாரம், ஒரு வருடத்திற்கு குறைந்த 715 கோவைகளும், 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய 1283 கோவைகளும், 05 தொடக்கம் 10 ஆண்டுகளுக்குரிய 347 கோவைகளும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 16 கோவைகளும் காணப்பட்டது.	புள்ளிவிபரங்களுடன் இணங்கப்படுகின்றதென குறிப்பிடப்பட்டுள்ளது.	முறைப்பாடுகள் பெறப்பட்ட காலத்தின் பிரகாரம் விசாரணைகள் விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	சட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்ட பிரிவில் ஒவ்வொரு சட்ட உத்தியோகத்தர்கள் பொறுப்பிலும் நிலவிய கோவைகளின் எண்ணிக்கை 846 ஆகும். சட்ட பிரிவின் பணிகள் நிறைவேற்றுவதற்குரிய பேணிச் செல்லப்பட வேண்டிய, மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய கோவைகள், 2024 ஆம் ஆண்டினுள் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக பெறப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை, 2024 ஆம் ஆண்டினுள் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை மற்றும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு நிலவிய கோவைகள் எண்ணிக்கைக்குரிய முறைப்பாடுகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	புள்ளிவிபரங்களுடன் இணங்கப்படுகின்றதென குறிப்பிடப்பட்டுள்ளது.	சட்ட பிரிவில் காணப்படுகின்ற கோவைகள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட தரவுத்தளமொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(இ)	ஆணைக்குழுவிற்கு பெறப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் மிகவும் வினைத்திறனாக, சரியாக மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதற்கு முறையான தரவு முகாமைத்துவ அமைபபொன்று தயாரித்தல் அத்தியாவசிய விடயமொன்றான போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி ஆனைக்குழு நிறுவப்பட்டு 30 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் உரிய வண்ணம் செயற்படுத்தப்படுகின்ற தரவு முகாமைத்துவ அமைப்பொன்று இல்லாமையின் காரணத்தினால் முறைப்பாமொன்று பெறப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து வழக்கு தொடரப்படும் சந்தர்ப்பம் வரையான செயன் முறையின் போது தொடர்புடைய கோவை காணப்படுகின்ற பிரிவு, கோவைக்கு பொறுப்புடைய நபர் மற்றும் அதன் நிலை தொடர்பாக தகவல்கள் விரைவாக பெற்றுக் கொள்வதற்கு முடியவில்லை.	UNDP நிறுவனத்தினால் அன்பளிப்பாக நிகழ்நிலை இலத்திரனியல் தரவு அமைப்பொன்று பெற்றுக் கொடுப்பதற்கு உடன்பட்டுள்ளதுடன் தற்போது அந் நிறுவனத்துடன் 2025.06.30 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் குறித்த வன்பொருள் (Hardware) அனைத்தும் நிறுவனத்தினால் தற்போது நிறுவப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	உரிய தரவு முாமைத்துவ அமைப்பொன்று தயாரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2023 இன் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையிடல் தொடர்பாக மற்றும் அவற்றை சரிபார்க்கும் பொறுப்பு ஆனைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆனைக்குழுவினால் நிர்வகிக்கப்படுகின்ற மையப்படுத்தப்பட்ட இலத்திரனியல் அமைப்பின் ஊடாக இந்த பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். 2025	இந்த அமைப்பும் UNDP உதவித் திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு இணங்கப் பட்டுள்ளதுடன் 2026 மார்ச் மாதத்திற்குள் நிறைவு செய்யப்பட்டு ஆனைக்குழுவிற்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை	சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கைக்கான இணையவழி மின்னணு தரவு அமைப்பை தயாரிக்கும் பணி விவைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரையிலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கைக்கான நிகழ்நிலை மின்னணு தரவு அமைப்பை அமைக்கும் பணிகள் நிறைவடைந்திருக்கவில்லை.	எடுக்கப்படுமென நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	

4.2 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரணை ஆனைக்குழுவின் திறன் மேம்பாடு மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் (UNDP) ஆனைக்குழுவிற்கும் இடையில் 2023 ஏப்ரல் மாதத்தில் ஒரு வருட காலத்திற்காக ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 19 செயற்பாடுகளின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துவதற்காக மானியமாக ரூபா 85,858,970 நிதியேற்பாடு ஆனைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டு செயற்திட்டம் செயற்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	செயற்திட்டத்தின் ஆரம்ப ஒப்பந்தத்தின் பிரகாரம் 2023 ஏப்ரல் மாதம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2024 மார்ச் மாதம் இறுதியில் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்தின் ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த செயற்பாடுகள் நிறைவேற்றுவதற்கு ஆனைக்குழுவிற்கு முடியாமையினால் 2024 யூன் 30 வரையில் 03 மாதங்கள் செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டு செயற்திட்ட ஒப்பந்தம் திருத்தப்பட்டிருந்தது.	ஆனைக்குழுவில் நிலவிய ஊழியர் பற்றாக்குறை மற்றும் UNDP இனால் தவணை தொகை உடன்பட்ட திகதிக்கு அனுப்புவதற்கு இயலாமையின் காரணத்தினால் செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது.	செயற்திட்ட ஒப்பந்தம் பிரகாரம் உரிய காலத்தினுள் செயற்பாடுகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	செயற்திட்ட ஒப்பந்தம் பிரகாரம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றுவதற்காக உதவித்தொகையாக பெற்றுக் கொடுக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 85,858,970 ஆன தொகையில் ரூபா 3,123,484 பயன்படுத்தாது மீண்டும் வெளிநாட்டு பிரநிதி (UNDP) அமைப்பிற்கு மீண்டும் செலுத்தப்பட்டிருந்தது.	ஒரு நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படாமை மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை மிகைத்து பெறுகையின் போது உள்ளவாரான செலவு குறைவடைந்தமையினால் ஏற்பட்ட சேமிப்பென குறிப்பிடப்பட்டுள்ளது.	செயற்திட்ட ஒப்பந்தம் பிரகாரம் உயர்ந்தபட்ச வினைத்திறனுடன் நிதி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	இலங்கையின் நீதித்துறைக்கு ஆதரவளிக்கும் செயற்திட்டத்தின் கீழ் (JURE) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகள் விசாரணை ஆனைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்த காலப்பகுதியில் பெற்றுக் கொடுக்கப்பட முன்மொழியப்பட்டிருந்த	இத்துடன் தொடர்புடைய பணிகள் நிறைவேற்றலானது UNDP (JURE) செயற்திட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் செயற்திட்ட காலத்தினுள் அப் பணிகள் நிறைவேற்றுவதற்கு அந்த நிறுவனம்	செயற்திட்ட ஒப்பந்தம் பிரகரம் தொடர்புடைய பணிகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	31 சொத்துக்கள் உறுப்படிகளுக்கு தொடர்புடைய 89 சொத்துக்கள் ஆனைக்குழுவிற்கு பெற்றுக் கொள்வதற்கும், 02 உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தோல்வியடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	
(ஈ)	இலங்கையின் நீதித்துறைக்கு ஆதரவளிக்கும் செயற்திட்டத்தின் கீழ் (JURE) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகள் விசாரணை ஆனைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் 03 ஆம் இணைப்பிலுள்ள 2.4 ஆம் செயற்பாட்டின் கீழ் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 775,000 தொகையான Children day program – Art Competition நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டிருக்கவில்லை.	உலக சிறுவர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்தோபர் 01 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் இறுதி காலாண்டிற்காக (2024 சனவரி – மார்ச்) ஒதுக்கப்பட்டிருந்த இந்த இந் த நிகழ்ச்சித்திட்டம் முன்கூட்டியே நடத்துவதற்கு அல்லது வேறு நிகழ்ச்சித்திட்டமொன்று UNDP நிறுவனத்திடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அனுமதி கிடைக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது.	செயற்திட்டத்திற்காக உடன்படும் போது பணிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ)	JURE செயற்திட்டத்தின் கீழ் ஊழல் தடுப்புப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வளவாளர்களை ஈடுபடுத்துவது தொடர்பாக நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் EST/7/ALLOW/05/0098 ஆம் இலக்க 2023 யூன் 16 திகதிய கடிதத்தின் பிரகாரம் அதிகபட்சம் 50 பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக வளவாளர்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் கவனம் செலுத்தப்படாது மீண்டும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது 72 பயிற்சி வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டு, நடத்தப்பட்ட அனைத்து பயிற்சி வேலைத்திட்டங்களுக்காகவும் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட வளவாளர் கொடுப்பனவு பெறுமதிகளே பயன்படுத்தப்பட்டிருந்தன.	ஒரு வளவாளருக்கு அதிகபட்சம் 50 நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	செயற்திட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளும் போது உரிய நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ)	இந்த செயற்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டிருந்த மொத்த பயற்சிநெறிகள் 99 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,946,617 செலவு செய்யப்பட்டு நடத்தப்பட்ட 13 பயிற்சி நெறிகளுக்குரிய, பங்கேற்பாளர்கள் தொடர்பான	இந்த நிகழ்ச்சிநிரல்களின் கையொப்ப ஆவணங்கள் ஆனைக்குழுவிடம் உள்ள கோவைகளில் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	விடயத்துடன் தொடர்புடைய அனைத்து தகவல்களும் தொடர்புடைய கோவைகளில் ஆவணப்படுத்துவத

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	தகவல்களுடன் கைச்சாத்திடப்பட்ட ஆவணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அது தொடர்பான உறுதிபடுத்தலொன்று பெற்றுக் கொள்ள முடியவில்லை.		ற்கு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளுக் காக அனைத்து தகவல்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(எ)	இந்த செயற்திட்டத்துடன் தொடர்புடைய பயிற்சிநெறிகளில் பங்கேற்றவர்கள் தொடர்பான தகவல்களை பரிசோதிக்கும் போது ஒப்பந்தத்தின் பிரகாரம் நிகழ்ச்சிநெறியில் பங்கேற்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது உள்ளவாரான பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 18 சதவீதம் தொடக்கம் 63 சதவீதம் வரை குறைந்துள்ள 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.	ஒரு நிகழ்ச்சிநிரல் தவிர்த்து ஏனைய நிகழ்ச்சிநிரல்கள் அரசாங்கத்தின் பயிற்சி நிறுவனங்களில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல்களாக காணப்பட்டமையினால் மற்றும் வார இறுதி நாட்களில் அல்லது விடுமுறை தினங்களில் நிகழ்ச்சிநிரல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையினால் பயிற்சி பெறுபவர்களின் ஈர்ப்பு பெறப்படாமையினால் பங்கேற்பு குறைவாக இருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது.	ஒப்பந்தத்தின் திட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4.3 பெறுகைகள்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகள் விசாரணை ஆனைக்குழுவின் முன்பக்கம் அமைந்துள்ள பழைய இருமாடி கட்டிடம் கடற்படையின் உதவியுடன் புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன், ஆனைக்குழுவினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் 2022 ஆண்டு தொடக்கம் 2025 மார்ச் 26 திகதி வரை கூட்டுதொகை ரூபா 29,399,847 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	மேற்படி கட்டிடம் நவீமயப்படுத்துவதற்குரிய கால வரையறையுடனான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய பொறியியல் மதியுரை பணியகத்திடமிருந்து பெறவேண்டியிருந்த கட்டிடம் நவீனமயப்படுத்துவதற்குரிய விலை மதிப்பீடொன்று மற்றும் நிர்மாணிப்பு திட்டம் ஆனைக்குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நவீனமயப்படுத்தல் பணிக்களுக்காக கட்டிடத் திணைக்களம் மற்றும் மத்திய பொறியியல் மதியுரை பணியகம் ஆகியவற்றிடம் மதிப்பீடுகள் கோரப்பட்ட போதிலும், அந்த நிறுவனங்களால் மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.	செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பழுதுபார்த்தலுக்காக மதிப்பீடு தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.8.4 பந்தியின் பிரகாரம் நிபுணத்துவ அறிவுடனான தொழிநுட்ப உதவியை பெற்றுக் கொள்வதற்கு தொழிநுட்ப குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் முறைமைகள் பிரகாரம் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளும் போது கட்டிடத்தின் நீண்டகால நிலைத்திருத்தன்மை சான்றுறுதிப்படுத்துவதற்கு தொழில்சார் வழிக்காட்டுதலொன்று மற்றும் மேற்பார்வையின் கீழ் பரிந்துரையுடன் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆனைக்குழுவினால் தொழில்சார் நிபுணரின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.	இந்த கட்டிடம் புனரமைப்பதற்கு தேவையான தொழிநுட்ப சேவைகள் கடற்படையின் சிவில் பொறியியல் பிரிவு மற்றும் மின் பொறியியல் பிரிவால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமையினால் தொழிநுட்ப மீளாய்வு குழுவொன்று தேவைப்படவில்லை.	பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் குழுவொன்று நியமிப்பதற்கு மற்றும் அறிக்கைகளின் பரிந்துரைபிரகாரம் தொழிநுட்ப நிபுணத்துவ உதவி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	மேற்படி கட்டிடம் பழுதுபார்ப்பதற்காக 2020 திசெம்பர் 22 திகதிய அமப/20/1935/306/062 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், கேள்வி விலைகள் கோரப்படாது தனி மூலமான பெறுகை முறையின் அடிப்படையில் அரச நிறுவனங்களுக்காக வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்திடமிருந்து கட்டிட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு ஆனைக்குழுவினால் உத்தரவிடப்பட்டதாக 2022 சனவரி 04 திகதிய பணிப்பாளர் (திட்டமிடல்) இன் கடிதத்தின் ஊடாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வப்போது வேறு வழங்குனர்களிடமிருந்து நேரடியே விலைமனு கோரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பான முறையான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை மற்றும் பாதகமான ஒருளாதார சூழ்நிலை காரணமாக கட்டிடப் பொரட்கள் கூட்டுத்தாபனத்திலிருந்து மூலப் பொருட்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியவில்லை எனவும் தொடர்புடைய பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியதனாலும், சந்தையில் மூலப்பொருட்களின் பற்றாக்குறை காணப்பட்டமையினாலும் மொத்த மதிப்பீடு தயாரிக்கப்பட முடியாமையினால் அவ்வப்போது கடற்படையின் ஊடாக விடுத்த கோரிக்கைகளின் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	பெறுகையின் ஆரம்பத்திலேயே மொத்த கிரயம் மதிப்பிடப்பட்டு மூல ப்பொருட்களின் தேவை இனங்காணப்பட்டு உரிய முறைமையின் கீழ் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஈ)	இந்த பழுதுபார்த்தலானது 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் புழுதுபார்த்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2022 மார்ச் 15 ஆம் திகதியாகையில் கட்டிடத்தின் பழுதுபார்த்தல்கள் நிறைவு செய்யப்பட்டு உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட வேண்டிய போதிலும், பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகள் கடக்கப்பட்டு, 2025 யூன் 30 ஆம் திகதி பழுதுபாரத்த்ல் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதென கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.	இந்த நிர்மாணிப்பு சில கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. கட்டிடத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 2025 யூன் மாதத்தின் போது நிறைவடைந்துள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	செயல்நடவடிக்கைத் திட்டம் பிரகாரம் உரிய காலத்தினுள் தொடர்புடைய பணிகள் நிறைவு செய்யப்படுதல் வேண்டும்.

5. சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரசாங்க வாகனங்களின் பராமரிப்பு தொடர்பான 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆனைக்குழுவிற்கு சொந்தமான 26 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டு தொடக்கம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் தற்போது 10 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எஞ்சிய வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் போக்குவரத்து பணிகள் அதிகரித்தமை மற்றும் 17 ஓட்டுநர்களின் வெற்றிடங்கள் காணப்படுகின்றமையினால் இந்த பணி மேற்கொள்வதற்கு கடினமாகியுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	பொது நிர்வாகச் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நிதி பிரமாணம் 1645(அ) பிரகாரம் லொங் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	லொங் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லுமாறு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை மற்றும் கட்டளைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் 1645(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம் லொங் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படல் வேண்டும்.

(இ)	ஆனைக்குழுவின் நிதி அல்லாச் சொத்துக்களுக்குரிய CIGAS கணினி அமைப்புக்களிலிருந்து உருவாக்கப்படுகின்ற சொத்துக்கள் குறியீடுகள் பௌதீக சொத்துக்களில் பயன்படுத்தப்பட்டிராமையின் காரணத்தினால் சொத்துக்கள் இனங்காண்பதற்கு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் சொத்துக்கள் உரிய வண்ணம் கைதவிர்ப்பு செய்வதற்கு மற்றும் பொருட்கள் ஒப்பாய்வின் போது சொத்துக்கள் துல்லியம் தொடர்பாக உறுதி செய்ய முடியவில்லை.	தற்போது நிலவுகின்ற ஊழியர் பற்றாக்குறை மற்றும் வேலைப்பழு காரணமாக CIGAS கணினி அமைப்பிலிருந்து உருவாக்கப்படுகின்ற குறியீடுகள் பௌதீயமாக சொத்துக்களில் பயன்படுத்தப்பட முடியாத போதிலும் 2025.06.01 ஆம் திகதி தொடக்கம் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் தற்போதுள்ள பொருட்களில் குறியிடப்படுவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிப்பதற்கு ஆலோசனை பெற்றுக்கொடுக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது.	CIGAS கணினி அமைப்பிலிருந்து உருவாக்கப்படுகின்ற சொத்து குறியீடுகளை பௌதீக சொத்துக்களில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2017 யூன் 26 திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 29,852,332 ஆன சொத்துக்கள் மற்றும் கைதவிர்ப்பு செய்யப்பட்ட கிரயம் ரூபா 396,115 ஆன சொத்துக்கள் தொடர்பாக கொம்ப்ரோலர் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2017 யூன் 28 திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் தகவல்கள் காலாண்டு ரீதியில் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்படுமாறு மட்டுமே ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கைபிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ)	சட்ட பிரிவிற்கு/ சட்ட உதவி பிரிவிற்கு தொடர்புடைய 2025 மார்ச் 17 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொருட்கள் ஒப்பாய்வு அறிக்கையின் முறையே 77 உறுப்படிகள் மற்றும் 21 உறுப்படிகளுக்காக நாளேட்டின் பிரகாரம் மீதி குறிப்பிடப்பட்டிராமையின் காரணத்தினால் முழுமையற்ற பொருட்கள் ஒப்பாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	சட்ட பிரிவு/ சட்ட உதவி பிரிவிற்கான பொருட்கள் இருப்பு புத்தகம் நாளதுவரையாக்கப்படுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென குறிப்பிடப்பட்டுள்ளது.	பொருட்கள் ஒப்பாய்வு அறிக்கைகள் சுற்றறிக்கை பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

6. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டினுள் ஆனைக்குழுவிற்கு சொந்தமான காரொன்றை பூச்சுவதற்கும் பழுதுபார்ப்பதற்கும் ஒரு தனியார் நிறுவனமொன்றிடமிருந்து மட்டுமே மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக இயந்திர பொறியியலாளர் அல்லது தொழிநுட்ப மீளாய்வு குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்படாது பெறுகை குழுவின் அங்கீகாரத்துடன் மட்டும் ரூபா 2,983,438 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் நாளாந்த ஓட்ட குறிப்பு பிரகாரம் இந்த வாகனம் 2023 திசெம்பர் 29 ஆம் திகதி இறுதியாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பழுதுபார்க்கப்பட்ட பின்னரும் வாகனம் பயன்படுத்தக் கூடிய நிலையில் இல்லாமையினால் கைதவிர்ப்பு செய்வதற்காக 2025 சனவரி 27 ஆம் திகதி குழுவொன்றின் ஊடாக அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பழுதுபார்த்தலுக்காக செலவு செய்யப்பட்டிருந்த மேற்படி தொகை சிக்கனமற்ற செலவொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	இந்த மோட்டார் வாகனத்தின் ஓட்ட கிரயம் அதிகமானதென்பதனால் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு கைதவிர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.	அரச நிதி பயனுறுதிமிக்க பணிகளுக்கு மட்டும் சிக்கனமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	200 பட்டதாரி புலணாய்வு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2018 ஒக்தோபர் மாதத்தில் நடத்தப்பட்டு, புலணாய்வு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு பணிக்காக ஆனைக்குழுவினால் 2019 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 7,392,734 செலவு செய்யப்பட்டிருந்தது. 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இந்த உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பரீட்சை நடத்தப்பட்டு 04 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது 2023 பெப்ரவரி 27 திகதி அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட	இந்த ஆட்சேர்ப்பு செயன்முறைக்காக ரூபா 7,392,734 ஆன தொகை செலவு செய்யப்பட்டுள்ளதுடன் பின்னர் அமைச்சரவை மீளாய்வு குழுவினால் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டமையினால் ஆட்சேர்க்கப்படுவதற்கு முடியாது போனதுடன் 2023 இன் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நிகழ்காலத்தில் அப் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கு சட்ட	அரச நிதி பயனுறுதிமிக்க பணிகளுக்கு மட்டும் சிக்கனமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

தீர்மானத்தின் பிரகாரம் இந்த ஆனைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் (சிவில்) ஆட்சேர்க்கப்படல் நிறுத்தப்பட்டுள்ளது.	ரீதியாக திறன் இல்லையென குறிப்பிடப்பட்டுள்ளது.	

7. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆனைக்குழுவின் ஒட்டுமொத்த ஊழியர் வெற்றிடங்கள் எண்ணிக்கை 470 ஆகும் அதாவது ஊழியர் எண்ணிக்கையில் 50 சதவீதம் ஆகும். இந்த வெற்றிடங்களில் 25 வெற்றிடங்கள் சிரேஷ்ட நிலையிலும், 187 வெற்றிடங்கள் மூன்றாம் நிலையிலும், 216 வெற்றிடங்கள் இரண்டாம் நிலையிலும், 42 வெற்றிடங்கள் முதன்மை நிலையிலும் காணப்பட்டதுடன் இந்த நிலை ஆனைக்குழுவின் செயலாற்றலுக்கு நேரடியே தாக்கமளிக்கக் கூடுமென அவதானிக்கப்பட்டது.	2023 இன் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 32 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக ஆனைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பதவியணியினராவதுடன் அதன் பிரகாரம் 2023 இன் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26(2) பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சின் பரிந்துரை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.	விரைவாக வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் அல்லது பதவியணியினர் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.